(முற்பகல் 11-10)

(94. விதி-111 இன் கீழ் கல்வியமைச்சரின் அறிக்கை.)

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு வினாத்தாள் வெளியானது குறித்து.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று அவையில் தற்போது நடந்து வருகிற பத்தாவது வகுப்பு அரசுத் தேர்வு தொடர்பாக காஞ்சிபுரத்திலே ஒரு பள்ளியிலே கேள்வித்தாள் மாற்றலாகத் தரப்பட்ட காரணத்தால் அது வெளியாகியிருப்பதாகவும் அது குறித்து அரசினுடைய நடவடிக்கை என்ன என்றும் அவையிலே வினா எழுப்பப்பட்டது.

அதுகுறித்து அரசு சி.ஐ.டி. மூலமாகவும், துறை மூலமாகவும் தீர ஆய்வு நடத்தியது. காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கன்னையா அண்ணா கவர்ன்மென்ட் ஹைஸ்கூல்—மன்னிக்க வேண்டுகிறேன்—ஆண்டர்சன் ஹையர் செகன்டரி ஸ்கூல், காஞ்சிபுரம் என்ற பள்ளியில் இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது. தேர்வு 20—3—1987 அன்று இங்கிலிஷ் ஃபர்ஸ்ட் பேப்பர்—ஆங்கிலம் ஃபர்ஸ்ட் பேப்பர் என்று அன்று தேர்வு நடந்தது. அது 27 வகுப்புகள் மொத்தம். ஏழு வகுப்புகளுக்கு அந்தக் கேள்வித்தாள் சென்றபொழுது 23—3—1987 அன்று நடக்கவேண்டிய இங்கிலிஷ் செகன்ட் பேப்பர் பண்டிலை—கட்டைத் தவறுதலாக அங்கே எடுத்துச் சென்று விட்டார்கள். அந்தக் கட்டைப் பிரித்துப் பார்க்காமல் அப்படியே அதை அந்த ஏழு அறைகளுக்கும் எடுத்துச் சென்று விட்டார்கள். மணி அடிப்பதற்குப் பத்து நிமிடங்கள் இருந்தன. 10 நிமிட நேரம் அந்தப் பண்டில் அந்த ஏழு வகுப்பிலே இருந்த ஏழு கண்காணிப்பாளர்கள் கையிலே—அவர்கள். அந்த ஏழு பேர்களும் ஆசிரியர்கள்—அவர்கள் பொறுப்பிலே இருந்தது. பிறகு அந்த பண்டிலை எடுத்தபொழுது அது ஆங்கிலம் செகன்ட் பேப்பர் 23—3—1987 அன்று நடக்க வேண்டிய தேர்வுக்கு உரிய கேள்வித் தாள் என்பது தெரிய வந்த காரணத்தால் அவர்கள் அந்த

1987 மார்ச் 25] (திரு. சி. பொன்னையன்)

டண்டிலைத் திருப்ப எடுத்து உடனே அவர்கள் Paper Custodian and departmental Officer என்று இருக்கின்ற திரு. பத்மனாபன், திரு. மாணிக்கவேல் ஆகிய இருவரிடமும் அந்த எழுவரும் தந்திருக்கிறார்கள்.

வெளி வந்திருக்கின்ற செய்தி, சில பகுதிகளில் அப்படியே கேள்வித்தாள் அவுட்டாகி ரோனியோ போட்டு விற்கப்பட்டதாகவும் எல்லாம் செய்தி வந்திருக்கிறது. அதை சி.ஐ.டி. யும் விசாரித்தது. அது தவறான தகவல். பேப்பரைப் பொறுத்த வரைக்கும் ஆங்காங்கு சில பேப்பர்கள் வெளியாகிவிட்டது என்று வியாபார நோக்கத்தோடு மக்களையும். மாணவர்களையும் ஏமாற்ற சிலர் செய்து கொண்டிருக்கின்ற காரியமாக இருக்கலாம். வெளியாகி இருப்பதாகச் சொல்லப்படுகின்ற அந்த வினாத்தாளுக்கும், 23—3—1987 நடந்த தேர்விலே வந்த வினாத்தாளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இருந்தபோதிலும் அந்த எழு ஆசிரியர்களும் அந்தக் கேள்வித்தாளை ஒரு பத்து நிமிடம் நேரம் பார்த்து இருக்கின்ற காரணத்தால் அவர்கள் மூலமாக வேண்டியவர்களுக்கு, நினைவில் வைத்துக்கொண்டு ஒருசில வினாக்களை அவர்கள் சொல்லியிருக்கக்கூடும். அதனால் மற்ற மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்திற்காக, செங்கை மாவட்டம் முழுவதும் 23—3—1987 நடந்த ஆங்கிலம் செகன்ட் பேப்பர் தேர்வை மீண்டும் மறு தேர்வு வைக்க அரசு ஆணையிட்டிருக்கிறது.

5. வரவு-செலவுத் திட்டம் 1987-88 பொது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு மிகவும் ஒரு சோதனையான கட்டத்தில் துவங்கியிருக்கிறது. நாடு பூராவும், தமிழகம் முழுவதும் நிறைந்த அளவில் இன்றைக்கு வறட்சி நடமாடிக்கொண்டு இருக்கிறது. விவசாயத்தை எடுத்துக் கொண்டால் மரம், செடி, கொடி, கரும்பு